2014 ஆகஸ்ட் 1]

அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக அந்தப் பணியிடங்களெல்லாம் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 303, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

303—

புதிய கட்டடம்

***34368—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளம் அங்கன்வாடி மையம் 2010 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 490-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சிங்கிகுளம் ஊராட்சி, நடுவன்குளம் கிராமத்தில் 500 மக்கள் வசிக்கிறார்கள்.*

நடுவன்குளம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 17 குழந்தைகள் கல்வி பயில்கிறார்கள். அந்த மையம் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 490-ல் 456 சதுர அடி நத்தம் புறம்போக்கு இடம் உள்ளது. அதில் புதிய கட்டடம் கட்டித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில், ஒட்டியம்பாக்கம், இளங்கோ நகர், பாலவாக்கம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் அங்கன்வாடி மையங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினரின் விருப்புரிமை அடிப்படையிலே அவர் குறிப்பிட்டிருக்கிற ஊராட்சிப் பகுதிகளிலே அங்கன்வாடி மையங்களைக் கட்டிக்கொள்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 304, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*